


01.06.2025

தலைப்பு செய்திகள்

- நாட்டின் குற்றவியல் பிரிவில் தடயவியல் துறைக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.
- ஆபரேசன் சிந்தூரில் பங்கேற்ற வீரர்களுக்கு ஃபிட் இண்டியா சைக்கிள் பேரணி அர்ப்பணிக்கப்படுவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா கூறியுள்ளார்.
- தமிழகத்தில் ஜூன் 3ஆம் தேதியை செம்மொழி தினமாக கொண்டாடுவதற்கான தீர்மானம் திமுக பொதுக்குழு கூட்டத்தில் இன்று நிறைவேற்றப்பட்டது.
- மாநிலங்களவை பதவியிடங்களுக்கு அஇஅதிமுக சார்பில் ஐ.எஸ்.இன்பதுரை, எம்.தனபால் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டனர்.
- 5. ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில் மும்பை இண்டியன்ஸ் - பஞ்சாப் கிங்ஸை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

*********

அமித்ஷா

நாட்டின் குற்றவியல் நீதிமுறையில் தடயவியல் அணுகுமுறைக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

கொல்கத்தா ராஜர்ஹாட்டில் 88 கோடி ரூபாய் மதிப்பில் மத்திய தடய அறிவியல் ஆய்வகத்தின் புதிய கட்டிடத்தை இன்று திறந்துவைத்து பேசிய அவர், நாடுமுழுவதும் தடயவியல் திறன்களை வலுப்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளதாக கூறினார்.

நியாயமான மற்றும் துல்லியமான தீர்ப்புகளுக்கு அறிவியல் சான்றுகளின் அவசியத்தை வலியுறுத்திய அவர், தடயவியல் உள் கட்டமைப்பை மறு சீரமைப்பது இன்றியமையாததாகும் என்றார்.

இந்த ஆய்வகம், மேற்குவங்க மாநில மக்களுக்கு மட்டுமன்றி ஜார்கண்ட், பீகார், ஒடிசா, சிக்கிம், அஸ்ஸாம் வடகிழக்கு பிராந்தியங்கள் மற்றும் அண்டை மாநிலங்களுக்கும் பயனளிக்கும் என்றார்.

*********

மன்சூக் மாண்டவியா

உடல் ஆரோக்கியத்தை பேணிகாக்கும் ஃபிட் இண்டியா இயக்கத்தின் 25ஆவது சைக்கிள் பேரணியை ஆபரேசன் சிந்தூரில் பங்கேற்ற துணிச்சலான வீரர்களுக்கு அர்ப்பணிப்பதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

முன்னதாக புதுதில்லியில் பிரபல விளையாட்டு வீரர்கள் பங்கேற்ற சைக்கிள் பேரணியை தொடங்கி வைத்த அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இப்பேரணியில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தேசியகொடியுடன் கலந்துகொண்டனர்.

நாடுமுழுவதும் இப்பேரணி இரண்டாயிரம் இடங்களில் நடைபெற்றது.

*********

பிரதிநிதி குழு

தீவிரவாதத்தை வேரோடு களைவது தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து அனைத்து கட்சி நாடாளுமன்ற பிரதிநிதி குழுவினர் உலக நாடுகளிடம் எடுத்துரைத்து வரும் நிலையில் பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழு இன்று லண்டன் சென்றடைந்தது.

பிரிட்டன் பாராளுமன்றத்தின் இரு அவை உறுப்பினர்கள், இந்திய வம்சாவளியினர் மற்றும் ஊடகங்களை சந்திக்கும் இக்குழுவினர் இந்தியாவின் ஆபரேசன் சிந்தூர் மற்றும் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைக்கின்றனர்.

பிரேசில் நாட்டு தலைவர்களுடன் ஆக்கப்பூர்வமான விவாதங்களை நடத்த ஆவலுடன் இருப்பதாக காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சசிதரூர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பிரேசில் தலைநகர் பிரசிலியா சென்ற இக்குழுவினர் அந்நாட்டின் மூத்த தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரை சந்திக்கின்றனர்.

ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட் சென்றடைந்த திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி தலைமையிலான குழுவினர் அடுத்த இரண்டு நாட்களுக்கு அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் சமரசமில்லா நிலைப்பாடுகள் குறித்து எடுத்துரைக்கின்றனர்.

*********

ராணுவ கூட்டு பயிற்சி

இந்தியா - மங்கோலியா நாடுகளுக்கிடையே உலன்பதாரில் நடைபெறும் 17ஆவது இருதரப்பு ராணுவ கூட்டு பயிற்சி இருநாடுகளின் ஆயுதப்படைகளுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்று இந்தியாவிற்கான மங்கோலிய தூதர் அதுல் மல்ஹோரி தெரிவித்துள்ளார்.

வரும் 13-ம் தேதிவரை நடைபெற உள்ள இப்பயிற்சியில் மலைபாங்கான நிலப்பரப்புகளில் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளை கையாள்வது,

பன்னாட்டு படைகளுடன் இணைந்து செயல்படுவது உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

*********

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் ஜூன் 3ஆம் தேதி செம்மொழி நாளாக கொண்டாடப்பட வேண்டும் என்று தீர்மானம் மதுரையில் இன்று நடைபெற்ற திமுக பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழகத்திற்கு மத்திய அரசு தரவேண்டிய 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் கல்வி நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும்,

நகை கடன் தொடர்பான ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாடுகளை திரும்ப பெற வேண்டும்,

வக்ஃப் சட்ட திருத்த மசோதாவை திரும்ப பெற வேண்டும் உள்ளிட்ட 27 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

*********

மாநிலங்களவை தேர்தல்

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை பதவியிடங்களுக்கு வரும் 19-ம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அஇஅதிமுக சார்பில் ஐ.எஸ்.இன்பதுரை, எம்.தனபால் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான அறிவிப்பை அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே பழனிச்சாமி, இன்று வெளியிட்டார்.

ஏற்கனவே திமுக சார்பில் 3 வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட நிலையில் ஒரு இடத்தை திமுக, மக்கள் நீதிமையம் கட்சிக்கு ஒதுக்கியுள்ளது.

இதற்கான வேட்பு மனு தாக்கல் நாளை தொடங்குகிறது.

*********

மகேஷ்பொய்யாமொழி

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட தையல், இசை உடற்கல்வி ஆசிரியர்களுக்கு பணிநியமன ஆணைகளை மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று வழங்கினார்.

மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 தட்டச்சர் பணியிடத்திற்கான ஆணைகளையும் அவர் வழங்கினார்.

*********

சி.பி.ராதாகிருஷ்ணன்

தமிழக அரசு மத்திய அரசுடன் இணைந்து செயல்படுவது மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவும் என்று மகராஷ்டிர ஆளுநர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தமிழ்நாட்டில் டாஸ்மாக் பிரச்சனை அதிகரித்து இருப்பதாகவும், போதை பொருள் புழக்கத்தை ஒழிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

*********

நயினார் நாகேந்திரன்

மதுரையில் வரும் 22ஆம் தேதி முருக பக்தர் மாநாடு நடைபெற உள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் தமிழ்நாட்டில் மின் கட்டணத்தை குறைக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வில்லை என்று கூறினார்.

மேலும் மாநிலத்தில் தூர்வாரப்படாத இடங்கள் குறித்து முதலமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதனிடையே மதுரையில் நடைபெற உள்ள முருக பக்தர் மாநாடு குறித்து வீட்டு தொடர்பு இயக்கத்தை கோவையில் துவக்கிவைத்த பிஜேபி தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி ஸ்ரீனிவாசன் பொதுமக்களுக்கு துண்டுபிரசுரங்களையும் வழங்கினார்.

*********

இருவரி

நீதிக்கட்சி தலைவர் சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் பிறந்த நாளை ஒட்டி இன்று, திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள அன்னாரது மணிமண்டபத்தில் அவரது சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.

மாணாக்கர் மற்றும் பொதுமக்கள் இடையே அறிவியல் ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கில் கிருஷ்ணகிரி அரசு தொழில்நுட்ப கல்லூரியில் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் நினைவாக 15அடி உயரத்தில் அமைக்கப்பட்ட சந்திரயான் 3 ராக்கெட் மாதிரியை கல்லூரி முதல்வர் இன்று திறந்துவைத்தார்.

*********

மீன்வள பல்கலைகழகம்

நாகையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் ஜே.ஜெயலலிதா மீன்வள பல்கலைகழகத்தில் இளநிலை பட்டப்படிப்பிற்கான விண்ணப்ப பதிவு நாளை தொடங்கி வரும் 27ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

சிறப்பு பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் மாணாக்கர் தகுதி சான்றிதழ்களை இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்ய வேண்டும் என பல்கலைகழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

*********

முல்லை பெரியாறு

முல்லை பெரியாறு அணையிலிருந்து முதல்போக பாசனத்திற்கான தண்ணீரை தேக்கடி தலை மதகு பகுதியிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்சித் சிங் இன்று திறந்துவைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

*********

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் விற்பனை பொருட்கள் கண்காட்சி நாளை மறுநாள் தொடங்குகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

*********

ஒகேனக்கல்

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை காரணமாக கர்நாடக அணைகளிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு 8 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று 5 ஆயிரம் கன அடியாக உயர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் தொடர் மழை காரணமாக மணிமுத்தாறு அருவிக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு தடை நீடிக்கிறது.

இதனிடையே நீர்வரத்து சீரானதை அடுத்து குற்றால அருவிகளில் 7 நாட்களுக்கு பின்னர் சுற்றுலா பயணிகள் குளிக்க இன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

*********

பக்ரீத்

பக்ரித் பண்டிகை வரும் 7ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி நத்தம் ஆட்டுசந்தையில் 5 கோடி ரூபாய் மதிப்பிலான ஆடுகள் விற்பனையாகியுள்ளதாக எமது திண்டுக்கல் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*********

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் அஹமதாபாத்தில் இன்று இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் தகுதிச்சுற்று ஆட்டத்தில் மும்பை இண்டியன்ஸ் - பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்கிறது.

இதில் வெற்றி பெறும் அணி அஹமதாபாத்தில் நாளை மறுநாள் நடைபெறும் இறுதியாட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்ளும்.

*********

டென்னிஸ்

பாரீசில் நடைபெறும் ∴பிரஞ்ச் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ரோஹன் போபன்னா, செக் குடியரசின் ஆடம் இணை - ∴பின்லாண்டின் ஹெலியோவாரா, பிரிட்டனின் பேட்டன் இணையை இன்று எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி, அமெரிக்காவின் Galloway இணை – அமெரிக்காவின் Christian, Evan இணையை எதிர்கொள்கிறது.

*********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது